## மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்கு

# இந்தியாவுக்கே வழிகாட்டும் தமிழ்நாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் வரலாறு போற்றும் திட்டங்கள்!

**சென்னை, மே 14 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்காக மகளிர் விடியல் பயணம் திட்டம் ! கலைஞர் மகளிர் உரிமை திட்டம்! புதுமைப்பெண் திட்டம், பணிபுரியும் மகளிர்க்கு தோழி விடுதிகள் திட்டம்! அரசுப் பணிகளில் மகளிர்க்கு 40% இடஒதுக்கீடு திட்டம்! சுய உதவிகுழு மகளிருக்கு கடன் வரம்பை அதிகரிக்கும் திட்டம்! மகளிரை தொழில் முனைவோர் ஆக்கும் திட்டம் ! முதலான பல திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது !**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் மகளிர் சமுதாய மேம்பாட்டிற்குப் புரட்சிகரமான புதிய பலதிட்டங்களை அறிமுகப்படுத்தி மகளிர் சமுதாயத்தை உயர்த்தி வருகிறார்கள்.

**தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024!**

சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியைக் கொண்டே சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிட இயலும்; பாலின வேறுபாடுகளைக் களைந்திடவும், பெண்களுக்கான சமூகநீதி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையிலும், பெண்களுக்கு உரிய அங்கீகாரம், சமூகநீதி, பாலின சமத்துவம், ஆகியவற்றை அளித்திடும் வகையிலும், தமிழ்நாடு அரசின் சார்பில் "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை" 2024ஐ முதலமைச்சர் அவர்கள் 21.2.2024 அன்று வெளியிட்டு மகளிர் உரிமைக்கு வழிவகுத்துள்ளார்கள்.

**முதலமைச்சரின் விடியல் பேருந்து திட்டம் !**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கோட்டைக்கு வந்து முதன்முதல் ஆணைபிறப்பித்த 5 திட்டங்களில் ஒன்று விடியல் பயணத் திட்டம். பெண்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர்கள் ஆகியோர்க்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில் இதுவரையில் 682.02கோடி முறை பயணம் செய்துள்ளனர். திருநங்கைகள் 36.89 இலட்சம் முறையும், மாற்றுத் திறனாளிகள் 3.78 கோடி முறையும் பயணம் செய்து பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் பயனாக மகளிர் மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய்வரை சேமிக்கும் வாய்ப்பைப் பெற்று மகிழ்கின்றனர்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை**

ஏழை மக்களின் குடும்பங்களிலும், கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகப் பெண்கள் திகழ்கிறார்கள். பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கும் நோக்கில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவேதான், முதலமைச்சர் அவர்கள் இந்தத்திட்டத்திற்கு மகளிருக்கான உதவித்தொகை என்று கூறாமல் 'மகளிர் உரிமைத் தொகை என்று பெயரிட்டுள்ளார்கள். இத்திட்டத்தில் இதுவரை 1 கோடியே 15 இலட்சம் மகளிர் மாதந்தோறும் ரூ1,000/ உரிமைத் தொகையாக அவரவர் வங்கிக்கணக்குகளில் பெற்று வருகிறார்கள். இந்த மகளிர் உரிமைத் தொகை இதுவரை கிடைக்காத தகுதி வாய்ந்த மகளிர் அனைவருக்கும் வழங்கிட அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**புதுமைப் பெண் திட்டம்!**

முதலமைச்சர் அவர்களின். ஒரு புரட்சிகரமான திட்டம் இது. 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் பயின்ற மாணவியர், தடையின்றி உயர்கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள மாநிலஅரசு / ஒன்றிய அரசு சார்ந்த, மருத்துவக்கல்லூரிஉட்படஉயர் கல்வி நிறுவனங்களில், இளநிலைப் பட்டப் படிப்பில் சேரும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கப்பட்டு வருகின்றது. நேரடிப் பணப் பரிமாற்ற முறைப்படி, இந்த உதவித் தொகையை இதுவரை 4.95,000, மாணவியர் நேரடியாகத்தம் வங்கிக் கணக்குகளில் பெற்று முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்தின் காரணமாகப் பள்ளிப் படிப்பை முடித்துக் கல்லூரிகளில் சேரும் மாணவியர் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என மாநில திட்டக்குழுவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

**பணிபுரியும் மகளிருக்கு "தோழி விடுதிகள்"!**

மகளிர் படித்துமுடித்துச் சொந்தஊரை விட்டு வந்து வெளியூரில் தங்கிப் பணிபுரிவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இதைக்களையும் நோக்கில் முதலமைச்சர் அவர்கள் பணிபுரியும் மகளிர்க்காக தோழி விடுதிகள் எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆங்காங்கே தோழி விடுதிகளை ஏற்படுத்தி வருகிறார்கள். 13 தோழி விடுதிகள் 1303 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் 14 இடங்களில் தோழி விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சேலம், தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி, அடையாறு (சென்னை) ஆகிய 7 இடங்களில் 476 படுக்கை வசதிகள் கொண்ட விடுதிகள் ரூ.4.21 கோடியில் புதுப்பிக்கப்பட்டு 13.7.2023 முதல் செயல்பட்டு வருகிறது.



**மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் ரத்து!**

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கடன் களில் 31.3.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்தகடன் தொகை ரூ.2,755.99 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. 1,17,617 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர்பயன் பெற்றுள்ளனர்.

**மகளிர் இட ஒதுக்கீடு 40 சதவீதம்!**

அரசுப் பணிகளில் மகளிர்க்கான இட ஒதுக்கீடு 30 சதவீதம் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் சட்டமியற்றி நடைமுறைப் படுத்தினார்கள். முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் இந்த இடஒதுக்கீடு 30 சதவீதம் என்பதை 40 சதவீதமாக உயர்த்தி மகளிர் அதிக அளவில் வேலைவாய்ப்புகளைப் பெற வழி வகுத்துள்ளார்கள்..

**மகப்பேறு விடுப்பு உயர்வு!**

அரசுப் அலுவகங்களில் பணிபுரியும் மகளிர் ஆசிரியைகளின் மகப்பேறு விடுப்பு 9 மாதம் என்பது 12 மாதங்களாக 2021ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

**மகளிர் சுய உதவிக்குழு கடன் உச்சவரம்பு அதிகரிப்பு!**

திராவிட நாயகர் அவர்கள் ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கிடும் கடன் உச்ச வரம்பை ரூ.12 இலட்சம் என்பதில் இருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி உத்தரவிட்டார்கள்.

2016 முதல் 2020 வரைநான்கு ஆண்டுகளில் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ. 39,468.88 கோடி. ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் 2021 முதல் 2025 வரைவழங்கப்பட்டுள்ள கடன் ரூ. 1,12,299 கோடி

**சத்துணவுத்திட்ட மகளிர் மேம்பாட்டில் திராவிட நாயகர்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்க்கான ஓய்வு வயதினை 58 லிருந்து 60 ஆக உயர்த்தி, அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளார்.

**தொழில்முனைவோராக மகளிர்!**

பெண்கள் கல்வியோடு நின்றிடாமல் அவர்களுக்குத் தாமே சுயமாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். Start Up எனப்படும் புத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு அரசாங்கம் மானிய நிதி அளிக்கும் TANSEED (Tamil Nadu Startup Seed Grand Fund) என்கிற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக, பெண்தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் சிறப்புத் தொகுப்புகளும் அளிக்கப்படுகின்றன. பெண்தொழில் முனைவோரின் புத்தொழில்களுக்கு 15 இலட்சம் ரூபாய் வரை மானிய நிதி வழங்கி ஊக்கமளிக்கப் படுகிறது. இந்திய அளவில் பணிபுரியும் மகளிரில் 41% மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

**காவல்துறையில் பெண்கள்!**

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 39 புதிய மகளிர் காவல்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்கள், பெண்காவலர்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது வீதிகளில் நீண்ட நேரம் நிற்க வைப்பதைத் தடுத்து, அவர்களுக்கு இலகுவான பணிகள் வழங்க ஆணையிட்டு, அவ்வாறே வழங்கப்படுகிறது தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையடுத்து, நடைபெற்ற பொன்விழா நிகழ்ச்சியில் சிறப்புத் தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவள் (AVAL Avoid Violence Through Awareness and Learning) திட்டம் அறிமுக செய்யப்பட்டுள்ளது

**கலைத்துறை, பத்திரிகை துறைகளில் சிறந்த மகளிர்க்கு கலைத்துறை வித்தகர் விருதுகள்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு 2024 ஆம் ஆண்டில் மட்டும் மகளிர்க்கான கலைத்துறை வித்தகர் சிறப்பு விருது வழங்கப்படும் என அறிவித்தார்கள், அதன்படி இந்த விருது பழம்பெரும் திரையுலகப் பின்னணிப் பாடகி திருமதி.பி.சுசீலா அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதேபோல சிறந்த மகளிர் பத்திரிகையாளர்க்கு கலைஞர் நூற்றாண்டு சிறப்பு விருதாக கலைஞர் எழுதுகோல் விருது அறிவிக்கப்பட்டு திருமதி. சுகிர்தா சாரங்கராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**அறநிலையத் துறையில் பெண் ஓதுவார்கள்!**

திருக்கோவில்களில் அனைத்துச் சாதியாரும் அர்ச்சகர் திட்டத்தின் கீழ் ஓதுவார் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஓதுவார் பயிற்சி பெற்றவர்களில் 42 பேர் ஓதுவார்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களில் 11 பேர் பெண் ஓதுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு இட ஒதுக்கீடு!**

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு 1996 இல் வழங்கப்பட்டது . பின்னர் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டு, இலட்சக் கணக்கான மகளிர் உள்ளாட்சி நிறுவனங்களில் பதவிப் பொறுப்புகள் பெற்றுத் தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றனர். இன்று 21 மாநகராட்சிகளின் மேயர்களில் 11 மகளிர் பெண் மேயர்களாக விளங்குவது தமிழ்நாட்டிற்குரிய தனிச் சிறப்பாகும்.

**சிப்காட் தொழில் வளாகங்களில் குழந்தைகள் காப்பகங்கள்!**

முதலமைச்சர் அவர்கள் பெண்கள் நலனில் கொண்டுள்ள அக்கறையை நமக்கு காட்டும் ஒரு மகத்தான திட்டம் - குழந்தைகள் காப்பகங்கள் ஆகும்.

தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் முன்னேற்றத்திற்காக, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களை தொடங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டார்கள்.

இந்த 17 தொழிற்பூங்காக்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களில் ஏறத்தாழ 3 இலட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறு கின்றார்கள்.

இந்தக் குழந்தைகள் காப்பகங்கள், பணிபுரியும் பெற்றோரின், குறிப்பாகப் பெண்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், பெண் தொழிலாளர்கள் அதிகளவில் பணியாற்றக்கூடிய சூழலை உருவாக்கவும் உதவுகின்றன..

இப்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிடமாடல் அரசில் புதிய புதிய திட்டங்கள் நிறைவேற்றி மகளிர் நலன்களை மேம்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டி வருகிறது என்பதை வரலாறு போற்றுகிறது.

---

### கோ.சத்தியமூர்த்தி தலைமை! நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் பல்லாண்டு!

## குன்றத்தூர் நகரத்தில் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன், டி.ஆர்.பாலு எம்.பி., சைதை மா.அன்பரசன், பா.ஸ்ரீலேகா சிறப்புரை!

காஞ்சிபுரம், மே 14

குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு கழக ஆட்சியில் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (14.05.2025 புதன் கிழமை) மாலை 5 மணியளவில் பெரிய தெரு குன்றத்தூரில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்திற்கு நகரக் கழகச் செயலாளர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி தலைமை வகிக்கிறார்.

லயன் என்.குணசேகர் வரவேற்புரையாற்றுகிறார்.

டி.கே.குமாரசாமி , டி.எஸ்.கலைச்செல்வன், எம்.சங்கர், கே.கே.ராஜமாணிக்கம், அ.தமிழ்மாறன், டி.திருநாவுக்கரசு, க.வே. சிதம்பரம், ஜே.மணி மாறன், ஆர்.கே.அபிபுநிஷா, தா.கந்தசாமி, டி.என். அருள்மொழி, டி.வி.சரவணன், எம்.குப்புசாமி, ஜே.முனுசாமி, கே.எஸ். ராஜி, ஆர்.கே.சையத் யூசுப், டாக்டர் டி.பி.செந்தில்குமார், டாக்டர் ஜி. பாபு, ப.தீனதயாளன், டி. எம்.உமாசங்கர், ஆர்.கே. டில்லி பாபு, ஏ.ராஜேஷ்குமார், கே.எம்.டி.ஹரிகிருஷ்ணன், சுரேஷ், ரவிச்சந்திரன், மா.தமிழரசன், மு.அருண்குமார், டி.ஜீவானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் அமைச்சர் மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை மா.அன்பரசன், பா.ஸ்ரீலேகா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் படப்பை ஆ.மனோகரன், பாஸ்கர் சுந்தரம், ஏ.வந்தே மாதரம், பட்டூர் எஸ். ஜபருல்லா, இ.மணி, டி. ராஜேந்திரன், கே.ரஞ்சித் குமார், என்.தனபால், பி.சுரேஷ், எம்.பி.மணி, எம்.சுரேசுரேஷ்குமார், டி.ரமேஷ், இ.ராஜேந்திரன், எஸ்.சீனு, இரா. வேலாயுதம், எஸ்.கதிரவன், கே.என்.சசிகுமார், ஆர்.ஜெகன், டி.கந்தன், என்.மாரிமுத்து, டி.மானுவேல், ஜெயக்குமார், கே.சிவக்குமார், ஏ.ஜெயக்குமார், எம்.கே.முருகன், ஜே.நித்யராமன், வித்யா அரிபாபு, கலாவதி சங்கர், வைசல்யா தேவி அரிகிருஷ்ணன், பவித்ரா மோகன், லட்சுமி சுரேஷ், பவானி மாணிக்கம், கல்பனா கதிரவன், வசந்தி மணிமாறன், சசிகலா சசிகுமார், ஆர்.ராஜி, பானு சத்தியமூர்த்தி, டி.அசோகன், என்.மதன், லதா ரவிச்சந்திரன், கல்பனா சுந்தர்ராஜன், கார்த்திகேயன், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

என்.கருணாநிதி நன்றி கூறுகிறார்.



துறைமுகம் மேற்கு பகுதியில் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி உரையாற்றினார். இதில் எஸ். இராஜசேகர், எம்.விஜயகுமார், இரா.நரேந்திரன், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி., ஆர்.கலைச்செல்வி, இப்ராஹீம் கனி, எஸ்.ராஜேஷ் ஜெயின் எம்.சி, வெ.பரிமளம், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, எஸ். சந்தியாகு, சி.ப.ஜெயராமன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதீஷ்குமார், எல். சத்தியநாரயணன், சு.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், எல். சம்பத்குமார், டி.எஸ்.சேகர், லண்டன் முருகன், நா.ரஞ்சித் விஜயாலயன், டி.வேலு கலந்து கொண்டனர். பா.அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி நன்றி கூறினர்.

---

### மயிலை மேற்குப் பகுதி இளைஞரணி சார்பில்

## 122 வது வட்டத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்!

சென்னை, மே 14 -

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அரவிந்த்ர மேஷ் தலைமையில் மோர், பழரசம். பழங்கள் வழங்கும் விழா இன்று (14.05.2025 புதன்கிழமை) காலை 11 மணியளவில் டி.டி.கே. சாலை ஆழ்வார்பேட்டை நியாய விலை கடை அருகில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், பழங்கள் வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி எஸ்.ஜோயல், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதிஎம்.சி ராஜா அன்பழகன் எம்.சி. எஸ்.ஆர். ராஜாசுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பா ளர்கள் தினேஷ் மாணிக்கம், த. விக்னேஸ்வரன் எஸ். உமா சங்கர், சி.பிரகாஷ், எ.அஸ்வின் குமார், மற்றும் பகுதி அமைப்பாளர்கள் சீ.வி. திவான் குமார், டி.ஜெகதீஷ் பாபு ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் வட்ட செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, அ.நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ. இராஜேந்திரன், ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ. தவநேசன், வி.வெற்றி வேல், கோ. கண்ணன் துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, மற்றும் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர் மயிலை மேற்கு கிழக்கு பகுதி இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள் கு. லோகேஷ், நீ.ஜெயக்குமார், ந. உதயன், ர.இளையக்குமார், எ.சூர்யா, ஜெ. ராஜேஷ்குமார் தா.தீபன் வேஹேமந்த்குமார்.

பா.முருகேசன் ஏ குட்டி மு. நிரஞ்சன்சாய் சுந்தர் ரகு, அபினேஷ் பாபு நன்றி கூறுகின்றனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**வருவாய் துறை**

வ.து.ந.க.எண்.ஜி7 / 007478 / தொழில் வரி (P1) / 2024
மற்றும் வ.து.ந.க.எண்.ஜி7 / 000348 / சொத்து வரி (P1) / 2025

**குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு (இரட்டை உறையில்)**

மாநகர வருவாய் அலுவலர் (வருவாய் துறை தலைமையிடம்) அவர்களால் கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**வருவாய் துறை தலைமையிடத்து சொத்து வரி மற்றும் தொழில் வரி வசூலித்தல் ஆகிய இரண்டு பணிகளுக்கு 10 எண்ணிக்கை புள்ளிவிவரப்பதிவாளர்கள் வீதம் இரண்டு பணிகள் (10.10) ஒப்பந்த அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு பணியமர்த்தும் பணி.**

**பணியின் மதிப்பு ரூ.30,25,560/- (each work)**

முன் வைப்பு தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் **1 % (each work)**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் **26.05.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் **27.05.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2216 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**மாநகர வருவாய் அலுவலர்**




சென்னை, அயனாவரம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கூட்ட அரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீர.ராகவ ராவ், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பி.பாலச்சந்தர், கூடுதல் இயக்குநர்கள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.